### 2664 பூத்களில் இன்றும் - நாளையும் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாமில்

# புதிய வாக்காளர்களை சேர்த்திடும் பணியில் மும்முரமாக ஈடுபடுவீர்!

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர்– அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள்!

சென்னை, டிச.27-

முதல் அமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, இன்றும் நாளையும் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாமில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் 6 சட்டமன்றத் தொகுதியில் அடங்கி உள்ள 2664 வாக்குச்சாவடிகளிலும், விடுபட்ட புதிய வாக்காளர்களை சேர்க்கும் முக்கிய பணியில் வார்டு கிளைக் கழக செயலாளர்கள் BLA2 வாக்குச்சாவடி நிலை முகவர்கள் BLC தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள் BDA வாக்குச்சாவடி தகவல் தொழில்நுட்ப முகவர்கள் BYO வாக்குச்சாவடி பாக இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் கழகத்தினர் அனைவரும் இணைந்து, அவரவர் பாகங்களில் புதிய வாக்காளர்களையும், விடுபட்ட வாக்காளர்களையும் படிவம் 6ல் சேர்க்கும் இன்றியமையாப் பணியில் முனைப்புடன் ஈடுபட வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளிலும், வரைவு வாக்காளர் பட்டியலையும் மற்றும் தலைமைக் கழகம் தந்த நீக்கப்பட்ட வாக்காளர் பட்டியலையும் பிரித்து ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர் மூலம், அந்த வரைவு வாக்காளர் பட்டியல் அந்தந்த பாக BLA 2 வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்தந்த பூத் BLA2, BLC, BDA, BYO மற்றும் கழகத்தினர் அனைவரும் ஒன்றிணைந்து வீடு வீடாகச் சென்று வரைவு வாக்காளர் பட்டியலையும், நீக்கப்பட்ட வாக்காளர் பட்டியலையும் சரிபார்த்திடும் முக்கிய பணியில் ஈடு



பட்டுள்ளனர்.

பூத் வாரியாக வரைவு வாக்காளர் பட்டியலையும், நீக்கப்பட்ட வாக்காளர் பட்டியலையும் சரிபார்த்து, S.I.R. படிவம் தந்தும், வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாத, விடுபட்ட வாக்காளர்களையும், "ஓரணியில் தமிழ்நாடு" திட்டத்தின் கீழ் கழக உறுப்பினர்களாக சேர்த்தவர்களின் பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் நீக்கப்பட்ட வாக்காளர்களையும்

மற்றும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களையும் கண்டறிந்து, மொத்தத்தில் ஒவ்வொரு பூத்திலும் நம்முடைய கழக வாக்காளர்கள், கழக ஆதரவு வாக்காளர்கள் உள்ளிட்ட எவர் பெயரும் விடுபடாத வகையில் அனைவரையும் படிவம் 6ல் வாக்காளர்களாக சேர்த்திடும் முக்கிய பணியில் மும்முரமாக ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், வரைவு வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்கான முதல்கட்ட சிறப்பு முகாம், இன்று 27.12.2025 சனிக்கிழமை, 28.12.2025 ஞாயிற்றுகிழமை, ஆகிய 2 நாட்களும், இரண்டாவது கட்ட சிறப்பு முகாம் 3.1.2026 சனிக்கிழமை, 4.1.2026 ஞாயிற்றுக்கிழமை ஆகிய 2 நாட்களும், ஆகமொத்தம் 4 நாட்கள் சிறப்பு முகாம். காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மாவட்டம் முழுவதும் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

வரைவு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகள் வருகிற ஜனவரி 18ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

18 வயது நிறைவடைந்த புதிய வாக்காளர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர் இடம் பெறாமல் விடுபட்டுப்போன வாக்காளர்கள் "ஓரணியில் தமிழ்நாடு" திட்டத்தின் கீழ் கழக உறுப்பினர்களாக சேர்த்தவர்கள் பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் நீக்கப்பட்ட வாக்காளர்களையும் படிவம் 6ல் சேர்த்திட வேண்டும் என்றும்,

வாக்காளர் பட்டியலில் இருந்து இறந்த வாக்காளர் பெயர் இடம் பெற்றிருந்தாலும் அல்லது படிவம் 6ல் தவறுதலாக சேர்க்கப்பட்ட வாக்காளர்களின் படிவங்களின் மீது ஆட்சேபனை தெரிவித்து வாக்காளரை நீக்கும் படிவம் 7லும்,

பெயர் முகவரி மாற்றம் செய்யும் பணிகள் போன்ற திருத்தம் செய்யும் பணிகளை படிவம் 8லும் பூர்த்தி செய்து, அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாமில் தந்திட வேண்டும்.

மாவட்டம் முழுவதும் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் அடங்கிய 2664 வாக்குச்சாவடிகளில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாமில்

அந்தந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வார்டு கிளை கழக செயலாளர்கள், BLA2, BLC, BDA, BYO வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் இணைந்து இரு கரம் கோர்த்து இந்த இன்றியமையாத பணியினை இனிதே சிறப்பாக செய்து முடித்திட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வருகிற 2026சட்டமன்றத் தேர்தலுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணி மிகவும் முக்கியமானது என்பதை கவனத்தில் கொண்டு கழகத்தினர் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து இப்பணியை முனைப்புடன் செய்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# தன்னலம் கருதா உழைப்புக்கு வாழும் சாட்சி, ஐயா நல்லகண்ணு!

### 101வது பிறந்த நாளையொட்டி – வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, டிச. 27-

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் ஐயா நல்லகண்ணு அவர்களின் பிறந்தநாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "தன்னலம் கருதா உழைப்புக்கு வாழும் சாட்சி, ஐயா நல்ல கண்ணு அவர்கள்" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

முதல்வரின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**தியாகத்தின் பெருவாழ்வு: தோழர் நல்லகண்ணு ஐயா 101ஆவது பிறந்ததாள்.**

**விடுதலைப் போராட்ட வீரராகவும், விவசாயத் தொழிலாளர்களுக்கான போராளியாகவும் திகழ்ந்து, இன்றளவும் நமக்கு வழிகாட்டும் நூற்றாண்டு நாயகர், இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் முதுபெரும் தலைவர் ஐயா நல்லகண்ணு அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!**

**தன்னலம் கருதா உழைப்புக்கு வாழும் சாட்சியான, எண்ணற்ற இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டான தாங்கள்**

**நல்ல உடல்நலத்துடன் நீண்டநாட்கள் நிறைவாழ்வு வாழ்ந்திட விழைகிறேன்.**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




மேலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தோழர் நல்லகண்ணு ஐயா அவர்களை தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

### நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் -

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் - நல உதவிகள் வழங்கல்!

நெல்லை, டிச. 27 -

நெல்லை மத்திய மாவட்டம் இளைஞரணி சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (27.12.2025) நெல்லை மத்திய மாவட்டத்தில் உட்பட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் தொழிலா ளர்களுக்கு 49 சீருடை மற்றும் 1049 மாநகராட்சி களப்பணியாளர்களுக்கு நலத்திட்டம், 4049 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா நடைபெறுகிறது.

இந்நிகழ்வு இன்று முன்னாள் நெல்லை மத்திய மாவட்டம் கழக அலுவலகத்தில் (தெற்கு பைபாஸ் ரோடு) நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் மாவட்ட பொறுப்பாளர்கள் முன்னாள் அமைச்சர், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மேயர், துணை மேயர் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வட்டம், கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்கின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை நெல்லை மத்திய மாவட்டம் இளைஞரணி துணை அமைப்பாளர் வி.முகம்மதுமீரான்மைதீன் செய்துள்ளார்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# தந்தை பெரியாரின் திருவுருவப்படத்திற்கு மாலை!

### மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்!

செஞ்சி டிச 27–

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தந்தை பெரியாரின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளார் மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 52 வது நினைவு தினம் நேற்றுஅனுசரிக்கப்பட்டது. இதை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தந்தை பெரியாரின் திரு உருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சிக்கு செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகர துணை செயலாளர் சங்கர் , பொருளாளர் நெடுஞ்செழியன், எம்.பி.ஆர். மோகன்,மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ரசூல் பாஷா,மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி துணை அமைப்பாளர்சேகர், தொண்டர் அணி பாஷா, பஸ் டாண்ட் செல்லன், ஏழுமலை, கோகுல், ராஜ்,தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கொண்டனர்.






திருவண்ணாமலை மாவட்டம்

ரூ. 2,095 கோடியில்

314 முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்தல்

46 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

மற்றும்

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

நாள் : 27.12.2025 சனிக்கிழமை

நேரம் : காலை 11.30 மணி

இடம் : கலைஞர் திடல், மலப்பாம்பாடி, திருவண்ணாமலை மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் திராவிட மாடல் அரசின் சாதனைகள்

- ரூ. 14,734 கோடியில் 95,62,076 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்
- ரூ. 10,213 கோடியில் 2,02,697 வளர்ச்சித் திட்டப் பணிகள்
- மொத்தம் ரூ.24,947 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகள்

செ.ம.தொ.இ. / 1534 / வரைகலை / 2025

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

எல்லார்க்கும் எல்லாம் !

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009